# பொலன்னறுவை இராசதானி கால சிங்கள மன்னர்கள் ஆட்சியில் வெளியிடப்பட்ட தமிழ்ச் சாசனங்கள் - ஒரு பன்முகப் பார்வை

திருமதி அனிதா சசிகரன்
பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்

## அறிமுகம்

இலங்கை வரலாற்றில் காலத்திற்குக் காலம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல தலைநகரங்கள் தோற்றம் பெற்றிருந்த போதும் ஒருசிலவே இலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இலங்கையில் தோற்றம் பெற்ற முதலாவது தலைநகரான "அனுராதபுரம்" பண்டுகாபய மன்னனால் கி.மு. 377ல் தலைநகராக்கப்பட்டு, சோழப்படையெடுப்பு (கி.பி.993) வரை தலைநகர் என்ற அந்தஸ்தைப் பெற்றுச் சிறப்புடன் திகழ்ந்திருந்தது. அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தோற்றம் பெற்ற "பொலன்னறுவை இராசதானியும்" இலங்கை வரலாற்றில் தோன்றி வளர்ந்த இராசதானிகளுள் தனிச்சிறப்பு கொண்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், பொருளாதார, பண்பாட்டுத்துறைகளிலும் தனித்துவமான இடத்தினைப் பெற்றுள்ள பொலன்னறுவை இராசதானி கி.பி.993இல் ஜனநாதமங்கலம் என்ற பெயரால் சோழரால் தலைநகராக்கப்பட்டு பின்னர் முதலாம் விஜயபாகு காலத்தோடு புலஸ்திநகரம் எனப்பெயர் மாற்றப்பட்டது. கி.பி. 1215ல் கலிங்கமாகனின் படையெடுப்பு தென்னிலங்கையில் இடம்பெற்றமை மற்றும் பல்வேறுபட்ட காரணிகளினால் மூன்றாம் விஜயபாகுவினால் புதிய இராசதானியாக தம்பதெனியா உருவாக்கப்படும் வரை பொலன்னறுவை இராசதானி நிலைபெற்றிருந்தது. அனுராதபுர இராசதானியின் வரலாற்றைப் பொறுத்த வரை அடிக்கடி அந்நியப்படையெடுப்புக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக காணப்பட்டிருந்தாலும் இராசதானியின் ஆரம்பம், வளர்ச்சி சுதேச மன்னர்களால் நடைபெற்றது. ஆனால் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற சோழப்பேரரசினால் இலங்கையில் ஒரு இராசதானி நிறுவப்பட்டு முதன்முறையாக அந்நியர்களினால் முழு இலங்கையும் ஆட்சி செய்யப்பட்ட வரலாற்றை பொலன்னறுவை இராசதானியின் தோற்றத்தில் காணமுடிவது இவ் இராசதானியின் சிறப்பம்சமாகும்.

ஏறத்தாழ 77ஆண்டுகள் (கி.பி.993 - 1070) பொலன்னறுவையில் நடைபெற்ற சோழராட்சியில் நிர்வாக மொழியாக தமிழ்மொழி நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் இக்காலத்தில் தமிழ்மொழியில் பரவலாக பல சாசனங்கள், மெய்க்கீர்த்திகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை, மாதோட்டம், பதவியா,